**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.**

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 29–ஆம் நாள், வியாழக்கிழமை

**REA. No. 5 of 2023 in REA. No. 61 of 2016 in REP. No. 101 of 2015**

**in**

**O.S. No. 73 of 2012**

1. கலைவாணி
2. கமலா .. மனுதாரர்கள் / மனுதாரர்கள் / கோருரிமையாளர்கள்

எதிர்

1. கல்யாணி
2. கனகேந்திரன் .. எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர் / தீர்ப்புக்கடனாளி

இம்மனுவின் மீதான விசாரணையானது 09.01.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சத்தியசரவணன் அவர்களும், 1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சுப்பராயன் அவர்களும் ஆஜராகியும், 2–ஆம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**REA. No. 27/2018 in REA.No.61/2016 in REP. No. 101/2015 in OS.No.73/2012**

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் கடந்த 31.10.2022–ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட REA.No.61/2016–என்ற மனுவினை மீண்டும் கோப்புக்கு எடுத்துக்கொள்ளக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 105(3) மற்றும் பிரிவு 151–ன் படி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள்/மனுதாரர்கள்/கோருரிமையாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

2–ஆம் மனுதாரர் நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்துள்ள கோருரிமை மனு REA.No.61/2016–ல் 2–ஆம் கோருரிமையாளர் ஆவார். 1–ஆம் மனுதாரர் 2–ம் மனுதாரரின் மூத்த சகோதரி ஆவார். 2–ஆம் எதிர்மனுதாரர் 2–ம் மனுதாரரின் தகப்பனார் என்றும், நிறைவேற்று மனுச் சொத்து மற்றும் சில சொத்துக்கள் மனுதாரர்களுக்கு உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்றும், மனுதாரர்களின் தகப்பனாரான 2–ஆம் எதிர்மனுதாரர் ஊதாரித்தனமாக வாழ்க்கை வாழ்வதை கருத்தில்கொண்டு, 2–ஆம் எதிர்மனுதாரரின் தந்தை ராமசாமிகோணார் மற்றும் அவரது மனைவி சின்னம்மாள் இருவரும் சேர்ந்து தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 29.10.1984–ஆம் தேதி 26/B3/1984 என்ற எண்ணில் உயில் ஆவணம் ஒன்று பதிவுசெய்துள்ளனர். மேற்படி அவர்களின் சுயசம்பாத்திய சொத்துக்களை மூன்று பாகங்களாக பிரித்து 'A' பாக சொத்துக்களை காலஞ்சென்ற சுந்தரராஜன் மனைவி மற்றும் பிள்ளைகள் அடைந்துகொள்வது எனவும், 'B' பாக சொத்துக்களை 2–ஆம் எதிர்மனுதாரர் மற்றும் வாரிசுகள் அடைந்து கொள்வது எனவும், 'C' பாக சொத்துக்களை சரசு என்பவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும்.

மேற்படி 2–ஆம் எதிர்மனுதாரர் 'B' சொத்துக்களை எவ்வாறு அனுபவிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி, 'B' பாக சொத்தை 2–

ஆம் எதிர்மனுதாரரும் அவரது மனைவி மல்லிகாவும் தங்கள் வாழ்நாள் முழுவதும் எவ்வித பராதீனம் செய்யாமல் அனுபவித்துக்கொள்ள வேண்டியது என்று "(ஷெட்டியூல் சொத்தை 2,3 நபர்களாகிய 2–ஆம் எதிர்மனுதாரராகிய கனகேத்திரனும் மல்லிகாவும் சேர்ந்து அடைந்து உங்கள் இருவர் ஜீவதிசை வரை மேற்படி சொத்தை எவ்வித வில்லங்க பராதீனம் செய்யாமல் அனுபவித்து வந்தும் 2,3 நபர்களாகிய உங்கள் இருவருக்கு மட்டும் ஏற்படும் வாரிசுகளில் ஆண் வாரிசுகள் இருந்தால் ஆண் வாரிசுகள் அடைய வேண்டியது. ஆண் வாரிசு இல்லையென்றால் தற்போது உள்ள உங்களின் பெண் வாரிசுகளாகிய கலைவானியும் கமலமும் இதற்கு பின்னிட்டு ஏற்படும் பெண் வாரிசுகளும் சர்வசுதந்திரபாத்தியங்களுடன் அனுபவித்துக்கொள்ள வேண்டியது)" என்று மேற்படி உயிலில் குறிப்பிட்டுள்ளனர்.

2–ஆம் எதிர்மனுதாரர் தான்தோன்றித்தனமான வாழ்க்கைக்கும், முறையில்ல பிறப்பில் பிறந்த குழந்தைக்கும் சொத்து சேர்க்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுகிறார். 2–ஆம் எதிர்மனுதாரர் தனது வைப்பாட்டியில் பிள்ளைகளுக்கு ஆதரவு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் 1–ஆம் எதிர்மனுதாரரிடம் கடன் வாங்கியது போல பொய்யான தாவா தாக்கல் செய்து மேற்படி தாவாவில் மனுதாரர்களுக்கு தெரியாமல் 2–ஆம் எதிர்மனுதாரரை மட்டும் தரப்பினராக சேர்த்து மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்று மனுதாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர்கள் இந்த கோருரிமை மனுவை தாக்கல் செய்துள்ளனர். 1–ஆம் மனுதாரர் பெங்களூரில் அவருடைய கணவருடன் வசித்து வருவதாகவும், 2–ஆம் மனுதாரர் வழக்கை நடத்தி வருவதாகவும், கடந்த 31.10.2022–ஆம் தேதி விசாரணைக்கு போடப்பட்டிருந்ததாகவும், கடந்த 6 மாத காலமாக உடல் நிலை சரியில்லாமலும் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக ஏற்பட்ட மன வருத்தங்களால் மேற்படி விசாரணை தேதியை தெரிந்து கொள்ளாமல் விட்டுவிட்டதாகவும், மேற்படி 2–ஆம் மனுதாரருக்கு 31.10.2022–ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகததால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட விவரம் தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரிய

வந்தது என்றும், கடந்த 31.10.2022–ஆம் தேதி மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட REA.No.61/2016–மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுத்து கொள்ள வேண்டியும், இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று கூறியுள்ளனர்.

3. **<u>1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். மனுதாரர்களே மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். கோருரிமை மனுவானது மனுதாரர்கள் ஆஜராகததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி மனுதாரர்கள் 30 நாட்களுக்குள் தேவையான மனுவை தாக்கல் செய்திருக்க வேண்டும் எனவும், ஆனால், மனுதாரர் 84 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு, இந்த மனுவை தாக்கல் செய்து, பிரிவு 5 கால வரம்புச் சட்டத்தின் கீழ் மேற்கண்ட மனுவை தாக்கல் செய்துள்ளனர். இந்த சட்டத்தின் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்ய முடியாது என்றும் கூறியுள்ளார்.

மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகததற்கு கடந்த ஆறு மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாகக் கூறுவது பொய்யானது என்றும், மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞர் மூலம் மனு தாக்கல் செய்த நேரத்தில்தான், மேற்கூறிய கோருரிமை மனு 31.10.2022–ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்று கூறியுள்ளனர். எனவே, இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளனர்.

4. ***தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,***

மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு</u>**

இம்மனு, கடந்த 31.10.2022 அன்று மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட **REA.No.61/2016** என்ற கோருரிமை மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளக் கோரி, **உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 105(3) மற்றும் பிரிவு 151–**ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பில், 31.10.2022 அன்று விசாரணை தேதிக்கு ஆஜராகாதது, காலம் தாழ்த்தும் நோக்கத்தினால் அல்ல என்றும், 2–ஆம் மனுதாரரின் உடல்நலக் குறைவு மற்றும் குடும்ப சூழ்நிலைகளால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. மேலும், மனு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் பின்னர் தான் தெரிய வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக, 1–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் தக்க காலக்கெடுவுக்குள் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றும், மனுவில் கூறப்படும் காரணங்கள் உண்மையற்றவை என்றும் பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று மனு (REP) 101/2015–ஆனது எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு பெறுநரால் தீர்ப்பு தொகையான ரூ.51,475/– ற்கு மனுவில் கண்ட சொத்தை ஜப்தி செய்து ஏலம் விட்டு தொகையை கொடுக்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் இந்த மனுதாரர்கள் சி.பி.சி பிரிவு 47–ன் கீழ் மனு தாக்கல் செய்து அம்மனுவானது மனுதாரர்கள் ஆஜராகாததால் தள்ளுபடி செய்யப்பட்டதை மீண்டும் கோப்பிற்கு எடுக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

மனுவில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து மனுதாரர்களுக்கு தங்களது மனுவை நிரூபிக்க வாய்ப்பு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு:**

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 29–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.29 19:00:49 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.29 19:01:01 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**
**REA. No. 27/2018 in REA.No.61/2016 in REP. No. 101/2015 in OS.No.73/2012**
அசல் / வரைவு உத்தரவுரை
நாள் : 29.01.2026